1 3 OCT 20..
Eastern University, Sri ...

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## PART – III EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION/ COMMERCE
## 1998/ 99 (PROPER/ REPEAT) (MARCH - 2005) EXTERNAL DEGREE
## COM 405 SMALL BUSINESS MANAGEMENT AND ENTREPRENEURSHIP

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

01. அழகு சாதான தொழில் முயற்சி

தர்ஷினியும் சுபாஷ்ம் 37 வயதுடைய, 14 வருடங்களுக்கு முன் திருமணம் முடித்த தம்பதிகளாகும். அவர்களுக்கு 12, 10 வயதுகளையுடைய இரண்டு பிள்ளைகள் உண்டு. தர்ஷினி இரசாயனவியல் துறையில் பல்கலைக்கழகப் படிப்பினை முடித்தவள். அத்துடன் அவள் தனது பல்கலைக்கழகப் படிப்பை விடும் வரைக்கும் ஒரு பாரிய இரசாயுன நிறுவனம் ஒன்றில் விற்பனைப் பிரதிநிதியாக வேலை செய்தாள். அவள் அந் நிறுவனத்தில் ஒரு சிறந்த விற்பனைப் பிரதிநிதியாகும். அத்துடன் அவள் சாதாரண விற்பனை தரகினை விட மேலதிகமாக நிலையான தரகினை உழைத்தாள். சுபாஷ் வியாபார நிர்வாகத்துறையில் தனது பட்டப் படிப்பினை முடித்தான். அத்துடன் அவன் தற்போது நடுத்தரளவிலான இயந்திரங்களினை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் ஒரு உதவி பொறி முகாமையாளராகப் பணிபுரிந்து வருகின்றார். இந் நிறுவனம் சில்லறை விற்பனை மேசைகளையும் நிலையத்திற்குத் தேவையான களஞ்சிய இராக்கைகளையும் (Store shelves), மேசைகளையும் (counters) இனையும் உற்புத்தி செய்து வருகின்றது.

தர்ஷினியும், சுபாஷ்ம் திருமணம் முடிப்பதற்கு முன்பே சொந்த வியாபாரம் ஒன்று ஆரம்பிப்பது தொடர்பாகக் கலந்துரையாடி இருந்தார்கள். ஒரு வியாபாரத்தினை உருவாக்குவது தொடர்பான சவால்களும், மேலும் அவ் வியாபாரத்தினை வளர்ச்சியடையச் செய்வதற்கான உந்துதலும் அவர்களிடம் அதிகளவு காணப்பட்டது. அவர்கள் திருமணம் முடித்து இரண்டு வருடங்களின் பின், தமது குடும்ப வாழ்க்கைக்கு சுபாஷின் சுபாஷின் சம்பளத்தினைப் பயன்படுத்தினார்கள், தர்ஷினியின் சம்பளத்தினை (வரி செலுத்திய பின்) முதலீடு செய்தார்கள். இவ் வகையில் அவர்கள் வியாபாரத்திற்குத் தேவையான மூலதனத்தினைத் திரட்டி வந்தார்கள். தற்போது அவர்கள் ரூபா. 2,000,000 பணத்துடன் புதிய சொந்த வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்குத் தயாரானார்கள்.

பல்வேறு வகையான முதலீடுகள் தொடர்பாக பல ஆய்வுகளை பல வருடங்களாகச் செய்தார்கள். எத்தகையு வியாபாரத்தினை ஆரம்பிப்பது தொடர்பான முடிவுகளையும் பல தடவை மாற்றிக் கொண்டார்கள்.

மூன்று வருடங்களுக்கு முன் தர்ஷினி குறிப்பிட்ட அழகு சாதனங்களையும் (Cosmetics) குளியலறை (Toiletries) பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பான சாத்தியப்பாடுகளைப் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு இருந்தாள். மேற்படி வியாபாரத்தினை ஆரம்பிப்பது பெறுமதியானது என இருவரும் முடிவிற்கு வந்தனர். பின்வரும் பொருட்களை உற்பத்தி செய்வதாக தர்ஷினி முடிவெடுத்தாள்.

| பெண்களுக்கான பொருட்கள் | | ஆண்களுக்கான பொருட்கள் | |
|---|---|---|---|
| முகப்பூச்சுத் தைலம் | (Face cream) | முடி உரமூட்டி | (Hair tonic) |
| முடி கழுவி | (Hair rinse) | முகச்சவரத் தைலம் | (Shaving cream) |
| வாசனையூட்டிகள் | (Perfumes) | முகச்சவரத்தின் பின்னர் பூசும் தைலம் | (After-shave lotion) |
| கைத் தைலம் | (Hand cream) | ஆண்களின் வாசனையூட்டிகள் | (Men's cologne) |
| சம்போ | (Shampoo) | | |

தர்ஷினி அப்பொருட்களை இயலுமானவரை ஒவ்வாமையை ஏற்படுத்தாதவையாக செய்வதற்கு முயன்றுள்ளாள். இப் பொருட்களின் உற்பத்திச் செய்முறையாக வேறுபட்ட மூலப்பொருட்களைச் சேர்த்தல் (Mixing) அல்லது கொள்கலனில் நிரப்புதல் போன்றவையாக இருப்பதால், சுபாஷும் தர்ஷினியும் அப் பொருளினை தங்களிற்கு பிரயோகப்படுத்தினார்கள். மேலும், மேற்குறிப்பிட்ட ஏதேனும் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு இயந்திரம் தேவைப்பட்டது. இதன் காரணமாக அவர்களின் முதலீடு ஒரு வரையறைக்கு உட்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டது. சுபாஷ் தனது தேவைக்கு ஏற்றவாறு கட்டிடம் ஒன்றினை குத்தகைக்கு எடுத்திருந்தார். அவர்களுக்குத் தேவையான இயந்திரம் ஒன்றினையும் கொள்வனவு செய்வதற்கு கட்டளை பிறப்பித்தார். அவரின் மதிப்பீட்டின்படி, பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான சகல செலவுகளையும் செலவு செய்தபின் மிகுதியாக ரூபா. 200,000 இனைத் தொழிற்படு மூலதனமாகப் பயன்படுத்தினார்.

சுபாஷ் அடுத்த வாரத்தில் இருந்து விலகுவதற்கான இராஜினாமா கடிதத்தினைக் கையளித்தார். நிறுவனம் ஒரு இலாபகரமான நிலைக்கு வரும் வரைக்கும் தர்ஷினி பாதுகாப்பாகத் தனது பழைய தொழிலில் இருந்தாள். கடந்த மாதம் இருவரும் தங்களது கடுமையான உழைப்பினை தங்களது வியாபாரத்தில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. இதுவரையும் எவ்வகையான வியாபார உரிமையாண்மை (Form of ownership) தேவை எனத் தீர்மானிக்கவில்லை.

வினாக்கள் :

a. சுபாஷ் தனது வியாபார உரிமை தனியுடமை வியாபாரம் (sole proprietorship) எனத் தெரிவு செய்வாரா? உமது விடையினை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

b. சுபாஷ் தனது வியாபார உரிமை 'பங்குடமை வியாபாரம்' (partnership) எனத் தெரிவு செய்வாரா? உமது விடையினை விபரிக்குக. சுபாஷ் மேற்குறிப்பிட்ட வியாபாரம் பங்குடமை எனத் தெரிவு செய்தால், எவ்வகையான பங்காளர்களை அவர் தெரிவு செய்வார்?

(08 புள்ளிகள்)

c. சுபாஷ் தனது வியாபார உரிமையினை ஒரு 'வரையறுக்கப்பட்ட கம்பனியாக' (limited liability company) தெரிவு செய்வாரா? உமது விடையினை விபரிக்குக. சுபாஷ் தனது வியாபார அமைப்பு ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனி எனத் தெரிவு செய்தால் அவர் முன்னுரிமைப் பங்குகளையா? (Preferred stock) அல்லது சாதாரண பங்குகளையா? (Common stock) அல்லது இரண்டு பங்குகளையுமா வழங்குவார்? ஏன்?

(08 புள்ளிகள்)

d. உரிமை அமைப்பில் மாற்றத்தினை உண்டாக்கும் தேவையை ஏற்படுத்தும் நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழக்கூடுமா? உங்கள் விடையினை விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 28 புள்ளிகள்)

a. 'சிறிய, மற்றும் நடுத்தரளவிலான வியாபார நிறுவனங்களே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிற்கு மிகவும் பொருத்தமானது எனப் பல நிறுவனங்கள் கருத்துக்களை முன்வைக்கின்றன'. ஆராய்க.

(06 புள்ளிகள்)

b. வேறுபட்ட நிறுவனங்கள் சிறுவியாபார முயற்சியினை வரையறுப்பதற்கு அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் உள்ள மதிப்பீடுகளை கருத்திற்கு எடுக்கின்றது. அவ்வாறான மதிப்பீடுகள் யாவை?

(04 புள்ளிகள்)

c. ஏற்கனவே உள்ள நிறுவனமொன்றைக் கொள்வனவு செய்வதிலும் பார்க்க புது வியாபாரம் ஒன்றினை ஆரம்பிப்பதில் உள்ள நன்மைகள் யாவை?

(04 புள்ளிகள்)

d. ஒரு தொழில் முயற்சியாண்மை ஒன்றின் குணாதிசயங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

03. ஒரு வியாபாரத் திட்டமானது ஒரு சிறு வியாபாரத்தினை ஆரம்பிதற்கோ அல்லது விஸ்தரிப்பதற்கோ பயன்பாடாகவுள்ளது என ஒவ்வொரு தொழில் முயற்சியாளரும் கருதுகின்றனர்.

a. மேற்குறிப்பிட்ட கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக.

(06 புள்ளிகள்)

b. ஒரு சிறந்த வியாபாரத் திட்டத்தின் அடிப்படை மூலங்கள் யாவை?

(06 புள்ளிகள்)

c. ஒரு வியாபாரத் திட்டத்தினுடைய சுருக்கத்தின் (Executive summary) நோக்கம் என்ன?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

04. 'ஒரு சிறு வியாபார முயற்சியினை ஆரம்பிப்பதற்கோ அல்லது விஸ்தரிப்பதற்கோ நிதியானது ஒரு முக்கிய பாத்திரத்தினை வகிக்கின்றது'.

a. ஒரு சிறு வியாபார முயற்சிக்கான பிரதான நிதி மூலங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

b. ஒரு சிறு வியாபார முயற்சியாளர் முறைசார் துறையில் (Formal sectors) நிதியினைப் பெறுவதற்கு அணுகும் போது எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பிரச்சனைகளை இனம் காண்க.

(04 புள்ளிகள்)

c. "சிறு வியாபார முயற்சியினை ஆரம்பிப்பது அல்லது விஸ்தரிப்பது தொடர்பாக இலங்கை கொமர்ஷல் வங்கியானது பல்வேறு கடன் திட்டங்களினை அறிமுகப் படுத்தி உள்ளது". இலங்கை கொமர்ஷல் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேறுபட்ட கடன் திட்டங்களினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

05. "சிறு வியாபார முயற்சியானது தினமும் இடர்பாடுகளுக்கிடையே இயங்க வேண்டி இருக்கின்றது".

a. தற்காலத்தில் சிறு வியாபார முயற்சி எதிர்கொள்ளும் இடர்களை வகைப்படுத்தி விளக்குக.

(06 புள்ளிகள்)

b. ஏதேனும் ஒரு வகையினை தேர்ந்தெடுத்து அவ் இடர் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

c. இத்தகைய இடர்களுக்கு எதிராக எடுக்கக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

06. a. ஒரு முயற்சியாளரினையும் சிறு வியாபாரியினையும் வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

b. ஒரு சிறு வியாபார முயற்சியினை ஆரம்பிக்கும் போது ஒரு முயற்சியாளர் கவனத்தில் எடுக்க வேண்டிய காரணிகள் யாவை?

(06 புள்ளிகள்)

c. விற்பனை அபிவிருத்திக்கும் (sales promotion) தனியாள் விற்பனைக்கும் (personal selling) இடையிலான வேறுபாடு யாது?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

07. a. பெண்கள் முயற்சியாண்மை அபிவிருத்திக்குத் தடையாக அமையும் காரணிகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

b. எவ்வழிகளில் தொழில் முயற்சியாண்மை இலங்கையின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதில் பங்களிப்பு செய்கின்றது?

(06 புள்ளிகள்)

c. ஒரு வெற்றிகரமான சிறுவியாபார முயற்சியொன்றின் குணாதிசயங்களினை எடுத்துக் காட்டுக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

08. a. எவ்வாறு ஒரு தொழில் முயற்சியாளர், ஒரு உள்ளக தொழில் முயற்சியாளர், முகாமையாளர் என்பவரிடம் இருந்து வேறுபடுகின்றார் என விளக்குக.

(06 புள்ளிகள்)

b. சிறு வியாபாரம் என்றால் என்ன? இலங்கையில் ஒரு சிறு வியாபாரத்தின் விசாலத்தினை மதிப்பிடுவதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

(06 புள்ளிகள்)

c. இலங்கையில் ஒரு சிறு வியாபாரத்தினை மேம்படுத்துவது தொடர்பாக உம்மால் கையாளக்கூடிய தந்திரோபாயங்கள் எவை?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

LIBRAR